## கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி

## அசல் வழக்கு எண். 116/2016
## நாள் 16/02/2026 திங்கட்கிழமை

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – சாலமன் ராஜ்குமார் (DW1) | த/பெயர் – |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

9. வருவாய் அலுவலகத்தில் வழக்கு சொத்தை பொருத்து ஆவணங்கள் எதுவும் வேறு நபர்கள் பெயரில் மாற்றப்பட்டுள்ளதா என்பதை பார்த்து தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். 1ம் வாதி 2 மற்றும் 3ம் வாதி பெயரில் வழக்கு சொத்தை செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் பெயரில் பட்டா மாற்றமும் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய தாய் 2009ம் ஆண்டே இறந்துவிட்டார் என்றும் அவருடைய இறப்பிற்கு பின்னர் வாதிகளை அனுகி சொத்தை என் பெயரில் எழுதி கொடுக்குமாறு கேட்டேனா என்றால் 1ம் வாதியை கேட்டேன். 1ம் வாதி இறந்து எத்தனை நாட்கள் ஆகிறது என்றால் 3 வருடங்கள் ஆகிறது. அவர் இறந்த பிறகு 2 மற்றும் 3ம் வாதிகளிடம் சொத்தை என் பெயரில் எழுதி கொடுக்குமாறு கேட்டேனா என்றால் கேட்கவில்லை.

10. வழக்கு சொத்தில் உண்மையாக எனக்கு உாிமை இல்லை என்பதால் தான் உரிய நீதிமன்றத்தை அனுகி எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. சொத்தை அபகறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு சொத்தின் ஒரு பகுதியின் அனுபவத்தை வாதிக்கு வழங்காமல் உள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**